**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நிலமாற்றம் – திருவள்ளூர் மாவட்டம் – ஊத்துக்கோட்டை வட்டம் 64, எல்லாபுரம் கிராமம், மொத்த விஸ்தீர்ணம் 3.04.00 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 2.33.90 ஹெக்டேர்ஸ் புஞ்சை வகைப்பாடு நிலத்தினை பெரியபாளையம் அருள்மிகு ஸ்ரீ பவானியம்மன் திருக்கோயில் பக்தர்களுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைக்கு நிலத்திற்கான மதிப்பு நிர்ணயம் செய்து நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி.3)துறை**

**அரசாணை (நிலை) எண். 58**

**நாள் 11.04.2023**
**சுபகிருது, பங்குனி 28ந் தேதி**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.33, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி3–1) துறை, நாள் 25.02.2022.
2. இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் கடித ந.க.எண்.16969/2022/வி.1,நாள் 19.04.2022. (திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு முகவரியிட்டது)
3. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, கடித எண்.6869/அநி.3–1, 05.01.2023
4. மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.4347/2021/அ2, நாள் 20.01.2023
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண். 43464/2022/ப.ரா.3.3, நாள் 27.01.2023.

----

**ஆணை:**

மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் 2021–2022ஆம் ஆண்டிற்கான இந்துசமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையின் போது பெரியபாளையம் அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோவிலின் பக்தர்களின் அனைத்து தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் ரூ.125 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்ததை அடுத்து கீழ்க்காணும் வசதிகள் அக்கோவிலில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

1. பக்தர்களின் தரிசன வசதிக்காக காத்திருப்பு அறை(மண்டபம்) கட்டுதல்
2. பக்தர்களுக்கு தங்கும் வசதி
3. திருமண மண்டபத்துடன் கூடிய அன்னதானக் கூடம்.
4. 5 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி
5. கழிவறை, குளியலறை வசதிகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

மேலும், மேற்காணும் வசதிகளை ஏற்படுத்த கோவில் வளாகத்தில் போதிய இடவசதி இல்லாததால் திருக்கோவிலின் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் திருக்கோவில் மதில் சுவரையொட்டி பயன்பாட்டில் இல்லாத ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை திருக்கோவிலுக்கு வழங்கினால் மேற்படி திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு வேண்டிய கட்டமைப்பு வசதிகளை செய்து தர உதவியாக இருக்கும் என திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம் 64, எல்லாபுரம் கிராமம், பட்டா எண்.24ல் ஊத்துக் கோட்டை தாலுக்கா போர்டர் என்ற பெயரில் தாக்கலாகியுள்ள புல எண்கள் 1/3-ல் 0.47.00 ஏர்ஸ், 4/3-ல் 1.14.00 ஏர்ஸ், 6/3-ல் 0.90.50 ஏர்ஸ், 27/3-ல் 0.52.50 ஏர்ஸ் ஆக மொத்த விஸ்தீர்ணம் 3.04.00 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 2.33.90 ஹெக்டேர்ஸ் புஞ்சை வகைப்பாடு நிலத்தினை அருள்மிகு ஸ்ரீ பவானியம்மன் திருக்கோயில் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திடவும், நில உரிமை மாற்றம் செய்யவுள்ள நிலத்திற்கான மதிப்பு ரூ.5,08,96,640/-ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளதால், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போது சொந்தமான நிலங்களை வளர்ச்சி அடிப்படையில் 2.75 மடங்கு விலையினை இழப்பீடு தொகையாக ரூ.13,99,65,760/- மற்றும் மேற்படி புலத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கான மதிப்பு ரூ.86,78,000/-ஆக மொத்தம் ரூ.14,86,43,760/- என நிர்ணயம் செய்து எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கிட பரிந்துரை செய்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையின் மீது எந்தவொரு ஆட்சேபணையும் இல்லை எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்மொழிவினை ஏற்று அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோவில் பெரியபாளையம் பெயரில் நிலவுரிமை மாற்றம் செய்திட அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம் 64, எல்லாபுரம் கிராமம், பட்டா எண்.24ல் ஊத்துக் கோட்டை தாலுக்கா, போர்டர் என்ற பெயரில் தாக்கலாகியுள்ள புல எண்கள் 1/3-ல் 0.47.00 ஏர்ஸ், 4/3-ல் 1.14.00 ஏர்ஸ், 6/3-ல் 0.90.50 ஏர்ஸ், 27/3-ல் 0.52.50 ஏர்ஸ் ஆக மொத்த விஸ்தீர்ணம் 3.04.00 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 2.33.90 ஹெக்டேர்ஸ் புஞ்சை வகைப்பாடு நிலத்தினை அருள்மிகு ஸ்ரீ பவானியம்மன் திருக்கோயில் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திடவும், நில உரிமை மாற்றம் செய்யவுள்ள நிலத்திற்கான மதிப்பு ரூ.5,08,96,640/-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போது சொந்தமான நிலங்களை வளர்ச்சி அடிப்படையில் 2.75 மடங்கு விலையினை இழப்பீடு தொகையாக ரூ.13,99,65,760/- மற்றும் மேற்படி புலத்தில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கான மதிப்பு ரூ.86,78,000/-ஆக மொத்தம் ரூ.14,86,43,760/- என நிர்ணயம் செய்து அருள்மிகு ஸ்ரீ பவானியம்மன் திருக்கோயில் பக்தர்களுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறைக்கு தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்துக்களைக் கொண்டடைவு செய்தல் மற்றும் மாற்றம் செய்தல்) விதிகள் 2000ன் விதி 5ன்படி நடவடிக்கை எடுத்து பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு, நில உரிமை

மாற்றம் செய்ய திருவள்ளூர் மாவட்ட ஆட்சியருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

i) மேற்படி சர்வே எண்.6/3ல் திருக்கோயிலுக்கு மேற்கு பக்கத்தில் (ஊத்துக்கோட்டை முதல் பாலேஸ்வரம் சாலை)27/3ல் திருக்கோயிலின் தெற்கு பக்கத்திலும் (பெரியபாளையம் முதல் ஊத்துக்கோட்டை சாலை) மற்றும் கோயிலின் பின்புறம் வடமேற்கு பகுதி நுழைவு வாயில் சாலைகளின் இருபுறங்களிலும் கடைகள் அனைத்தும் (கடையின் நீளம் 9 மீட்டர் அகலம் 2.5 மீட்டர் நடைபாதை உட்பட) திருக்கோயில் நிர்வாகத்தால் கட்டித்தரப்பட வேண்டும்.

ii) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி கட்டமைப்பிற்கு ஏற்படும் செலவு தொகையினை திருக்கோயில் நிர்வாகத்தால் மேற்படி நில விற்பனைக்காக எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படும் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டும்.

iii) கடைகள் அமைந்துள்ள கட்டுமானப் பகுதிகள் இவ்வூராட்சி ஒன்றியத்தின் பெயரிலே தொடர வேண்டும்.

iv) மேற்படி நிர்ணய தொகையை திருக்கோயில் நிர்வாகத்தால் வழங்கப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பெ.அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை 15.
திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.
இயக்குநர், இந்து சமய அறநிலையத் துறை சென்னை –9
மாநில கணக்காயர், சென்னை–18.

**<u>நகல்</u>**
மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரின்
முதுநிலை உதவியாளர், சென்னை –9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சரின்
முதுநிலை உதவியாளர், சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை முதன்மைச் செயலாளரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9
நிதி(ஊ.வ.) துறை, சென்னை –9
இருப்புக் கோப்பு /உதிரி நகல்
கோ.எண்.12888/மா.அ.தி.3/2022

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

11.04.23.

**பிரிவு அலுவலர்.**